1973 பிப்ரவரி 10]

தொழிலாளர்கள் பிரதிநிதிகள் :

(8) பரமத்தி திரு. கே. சண்முகம், வடிவேல்நகர், கரூர், உறுப்பினர்.

(9) திரு. எஸ். துரைசாமி, எம். எல். ஏ., பொதுச் செயலாளர், கோயமுத்தூர் மாவட்ட திராவிட பஞ்சாலைத் தொழிலாளர் முன்னேற்ற சங்கம், கோயமுத்தூர், உறுப்பினர்.

(10) திரு. எஸ். ஜி. லட்சுமிநாராயணன், தலைவர், பரமக்குடி எமனேஸ்வரம் கைத்தறித் தொழிலாளர் சங்கம், பரமக்குடி, உறுப்பினர்.

(11) திரு. கே. ஜெயராமன், எம். எல். ஏ. சேலம், உறுப்பினர்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவரவர்களே, அந்தக் குழு என்ன முறையிலே விசாரணை நடத்தியிருக்கிறது ? அதன் அறிக்கை எப்போது வரும் ? அதன் அடிப்படையில் எப்போது நடவடிக்கை மேற்கொள்ளப் படும் என்று அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தலைவரவர்களே, விரைவில் அறிக்கையைச் சமர்ப்பிக்கவேண்டுமென்று அக்குழுவின் தலைவர் கேட்டுக் கொள்ளப் பட்டிருக்கிறார். அதற்கு ஏற்ப அவர் தன்னுடைய பணியினைத் துவக்கியிருக் கிறார்.

திரு. கே. டி. கே. தங்கமணி : தலைவரவர்களே, கைத்தறி நெசவாளர் களுக்குக் குறைந்த சம்பளத்தை நிர்ணயிக்க குழு அமைத்திருக்கிறார்கள். கைத்தறி நெசவாளர்களுடைய பிரச்னையைப் பற்றி ஆராய சந்தானம் குழு என்று ஒரு குழு அமைத்து இருக்கிறார்கள். இரண்டு குழுக்களும் இணைந்து பணிபுரிகின்றார்களா ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தனிக்கேள்வி போடவும்.

திரு. என். கணபதி : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, இந்த கைத்தறி நெசவாளர்களுக்கு ஊதியக் குழு அமைத்து இருப்பது, பட்டு நூல் நெசவுத் தொழிலாளர்களுக்கு மாத்திரமா அல்லது நூல் நெசவுத் தொழிலாளர்களுக்கு மாத்திரமா அல்லது இரண்டு பேர்களுக்கும் சேர்த்து ஆராயப்படுமா ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தலைவரவர்களே, கைத்தறி பட்டு நெசவுத் தொழிலாளர்களுக்காகத் தனியாக ஒரு குழு அமைக்கப் பட்டிருக் கிறது. அதன் தலைவர், உறுப்பினர்கள் பின்வருமாறு :

துணைத் தொழிலாளர் துறை ஆணையர், சென்னை—தலைவர்.

புள்ளியியல் துணை உதவி இயக்குநர் (சந்தை நிலவர புலனாய்வு), சென்னை—உறுப்பினர்.

வேலை கொடுப்போர் பிரதிநிதிகள் :

திரு. பி. ராமதாஸ், பங்குதாரர், ஸ்ரீமங்களாம்பிகா பட்டு வீச்சுதொழிற் சாலை, கும்பகோணம்.

திரு. என். கே. சுப்பராயச் செட்டியார், ஸ்ரீ லட்சுமி சரஸ்வதி பட்டு வீச்சு தொழிற்சாலை, ஆரணி.

தொழிலாளர் பிரதிநிதிகள் :

தலைவர், காஞ்சீபுரம் கைத்தறி நெசவுத் தொழிலாளர்கள் சங்கம், காஞ்சீபுரம்.

துணைத் தலைவர், குடந்தை பட்டு நெசவுத் தொழிலாளர்கள் சங்கம், கும்பகோணம்.

திரு. இ. எஸ். தியாகராசன் : தலைவரவர்களே, கைத்தறி நெசவுக் கூட்டுறவுத் துறையில் இல்லாத நெசவாளர்களுக்கும் சேர்த்து அந்தக் குழு ஆராயுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : சேர்த்துத்தான் ஆராயும்.

திரு. எம். சுரேந்திரன் : சார், இந்தக் கைத்தறித் தொழிலாளர்கள் குறைந்தபட்ச கூலி சம்பந்தமாகப் போடப்பட்டிருக்கின்ற குழுக்கள் எல்லாம் —சந்தானம் கமிட்டி, இப்போது குறிப்பிட்ட கமிட்டி, பட்டு நூல் சம்பந்தப் பட்ட கமிட்டி—அது குறித்து பணிகளை நடத்தி இருக்கிறார்கள். அதிலே எந்தக் கமிட்டி கூறுகின்ற குறைந்த பட்சக் கூலியை அரசாங்கம் ஏற்றுக் கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தலைவரவர்களே, அந்தக் குழுக்களின் அறிக்கைகள் கிடைத்த பிறகு அது பற்றி ஆராயப்படும்.

திரு. என். கே. பழனிசாமி : சார், அகில இந்திய தொழிற்சங்க கூட்டமைப்பு கைத்தறி நெசவாளர்கள் சம்பந்தப்பட்ட மட்டில் நீட்—பேஸ்ட் வேஜஸ் என்று ரூ. 250 நிர்ணயிக்கலாம் என்று தீர்மானம் நிறைவேற்றி இருக்கிறார்கள். அவர்களுடைய தீர்மானத்தை அரசு ஏற்றுக்கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : நான் ஏற்கனவே தெரிவித்தபடி அந்தக்குழுக்களின் அறிக்கைகள் வந்த பிறகு அதுபற்றி பரிசீலிக்கப்படும்.